**Kalanjiyam International Journal of Tamil Studies**
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026
https://ngmtamil.in/

# The Art of Music in Uthayanakumara Kaviyam

**K. Selvakamatchi[1*], Dr. N. S.K. Sangeethradha[2],**
[1]PhD Research Scholar, Tamil Advanced Research Centre,
Thiagarajar College, Madurai – 09
[2]Research Guide, Assistant Professor, Tamil Advanced Research Centre,
Thiagarajar College, Madurai – 09
*Corresponding Author Email: karthikeyan.sh@sritcbe.ac.in.

**Article Info**
Received on 22-April-2026, Revised on 25-April-2026, Accepted on 29-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

The objective of this research paper is to analyze the information related to the art of music in Udayanakumara Kavyam. The central themes of this study include the indispensability of arts in human life, the Jain perspective on art, the social and cultural significance of music, and the practical application of music in daily life. This paper explains the importance given to arts in Jain literature, the classification of arts meant for men and women, and the cultural value of these arts.

In Udayanakumara Kavyam, the art of music is depicted as having the power to captivate not only humans but also animals, birds, celestial beings (Gandharvas), and other living creatures. Udayanan's musical skill brings about various turning points in his life. Events such as gaining freedom from imprisonment, earning the respect of kings, teaching music to Vasavadatta and Padmavati, and reclaiming the divine lute (Devayazh) demonstrate the power and social value of music. Furthermore, the epic emphasizes the necessity of preserving and passing down artistic traditions to the next generation by teaching arts from early childhood..

***KEYWORDS:*** *Udayanakumara Kavyam, Art of Music, Jain Literature, Cultural Value.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

# உதயணகுமார காவியத்தில் இசைக்கலை

[1]**கா.செல்வகாமாட்சி,**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்,
தியாகராசர் கல்லூரி, மதுரை –09
[2]**முனைவர்.ந.செ.கி.சங்கீத்ராதா,**
நெறியாளர், உதவிப்பேராசிரியர், தமிழ்உயராய்வு மையம்,
தியாகராசர் கல்லூரி, மதுரை – 09

**ஆய்வுச் சுருக்கம்**

உதயணகுமார காவியத்தில் இசைக்கலை தொடர்பான செய்திகளை ஆராய்வதையே இந்த ஆய்வுக் கட்டுரை நோக்கமாகும். மனித வாழ்க்கையில் கலைகளின் இன்றியமையாமை, சமணர்களின் கலைப்பார்வை, இசையின் சமூக மற்றும் பண்பாட்டு சிறப்பு, மேலும் இசைக்கலையின் வாழ்வியல் பயன்பாடு ஆகியவை இவ்வாய்வின் மையக் கருத்துகளாக அமைகின்றன. சமண இலக்கியங்களில் கலைகளுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம், பெண்கள் மற்றும் ஆண்களுக்குரிய கலைகள் பற்றிய வகைப்பாடு, கலைகளின் பண்பாட்டு மதிப்பு ஆகியன இக்கட்டுரையில் விளக்கப்படுகின்றன.

உதயணகுமார காவியத்தில் இசைக்கலை மனிதர்களை மட்டுமல்லாது யானை, பறவைகள், கந்தர்வர்கள் போன்ற அஃறிணை மற்றும் பிற உயிர்களையும் வசப்படுத்தும் ஆற்றல் கொண்டதாகக் காட்டப்படுகிறது. உதயணனின் வாழ்வில் இசைத்திறம் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்துகிறது. சிறைவாசத்திலிருந்து விடுதலை பெறுதல், அரசர்களின் மரியாதையைப் பெறுதல், வாசவதத்தை மற்றும் பத்மாவதிக்கு இசை கற்பித்தல், தேவயாழை மீண்டும் பெறுதல் போன்ற நிகழ்வுகள் இசையின் ஆற்றலையும் சமூக மதிப்பையும் வெளிப்படுத்துகின்றன. மேலும், இளம்பருவத்திலேயே கலைகளைப் பயிற்றுவிப்பதன் மூலம் அடுத்த தலைமுறைக்கு கலை மரபைப் பாதுகாத்து எடுத்துச் செல்ல வேண்டிய அவசியத்தையும் காவியம் வலியுறுத்துகிறது.

**முன்னுரை**

ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றான உதயணகுமார காவியம் பெருங்கதையின் சுருக்கமாகவே அமையப்பெற்றுள்ளது எனவே கதையின் நகர்வு நிலையானது வேகமாகக் காணப்படுகிறது இக்காப்பியம் 15ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது மற்றும் சமண பெண் துறவி ஒருவரால் இயற்றப்பட்டது என்றும் கருதப்படுகிறது பெருங்கதை முழுமையாக கிடைக்க பெறாத நிலையில் உதயணகுமார காவியம் பெருங்கதையின் நிகழ்வுகளை தொகுத்துரைக்கும் சிறப்புடன் அமையப்பெறுகிறது இத்தகு தன்மை பொருந்திய உதயகுமார காவியத்தில் பல்வேறு கலைகள் பற்றிய செய்திகள் குறிப்பிடப்பட்டு இருப்பினும் இசைக்கலைப் பற்றிய தகவல்களே அதிகம் காணப்படுகிறது. உதயணகுமார காவியத்தில் அமைப்பெற்றுள்ள இசைக்கலை பற்றி ஆராய்வதாக இக்கட்டுரையானது அமையப்பெறுகிறது.

**மனித வாழ்வில் கலைகள்**

அனைவரையும் கவரக்கூடிய சிறப்பான ஒன்றாக வளர்ச்சியடைந்ததே கலையாகும். கலைகள் என்பன மனிதர்கள் மன மகிழ்ச்சி கொள்வதற்கும் மன நிம்மதி பெறுவதற்கும் உறுதுணையாக இருக்கின்றனவாகும்.

**"மனிதனுடைய நல் வாழ்விற்கு உதவுகிற எல்லாத் தொழில்களையும் கலைகள் என்று கூறலாம்"[1]** ஆயக்கலைகள் அறுபத்து நான்கு என்று சுட்டப்படுகின்றது. இக்கலைகளின் வகைமைகளிலும் பல வேறுபாட்டு முறைகளானது காணப்படுகின்றன. **"பண்டைய காலத்திலேயே நமது நாட்டில் அறுபத்து நான்கு கலைகள் இருந்தன என்று மணிமேகலை முதலிய நூல்கள் கூறுகின்றன. அக்காலத்தில் அறுபத்து நான்கு கலைகள் இருந்தன என்றால், பல துறைகயிலும் நாகரிகம் பெருகியுள்ள இந்தக் காலத்திலே கலைகளின் எண்ணிக்கை மிகமிகப் பெருகியிருக்கிறது என்பதில் ஐயம் இல்லை"[2]** எனவே இக்கால கட்டத்தில் கலைகளின் எண்ணிக்கை மேலும் பலவாக பல்கி பெருகியிருக்கின்றது எனலாம். இக்கலைகளானது **"மனிதனது உள்ளத்தைத் தன் வயமாக்கி நிரப்பி அவ்வளவோடு இல்லாமல் வெளிப்படும் ஆற்றலை கலை என்பது"[3]** மனிதனது உள்ளத்தை தன்வசமாக்கி மனதிற்கு நேர்மறை உணர்வை தரக்கூடிய சிறப்பினையுடையது

தமிழகக் கலைகள் பற்றி மா.இராசமாணிக்கைனார் சுட்டுகையில் 64 ஆயக்கலைகளைப் பற்றி குறிப்பிடுகிறார். அவற்றில் இசைக் கருவிகள் என்று பொதுவான பிரிவு மூன்றாவதாகவும் மேலும் யாழின் வடிவமாக கருதப்படக் கூடிய வீணை நான்காவதாகவும் அமையப் பெறுகிறது

அழகுக்கலைக்கு இன்கலை, கவின் கலை, நற்கலை என்று பல பெயர்கள் உண்டு. இவை ஐவகையாக பகுக்கப்படுகின்றன. அவை கட்டிடக்கலை சிற்பக்கலை ஓவியக்கலை இசைக்கலை காவியக்கலை என்பனவாகும்.

**இசையும் சமணரும்**

ஐஞ்சிறு காப்பியங்கள் அனைத்தும் சமண காப்பியங்களே. இவற்றில் உதயணகுமார காவியத்தின் கதைத்தலைவனாகிய உதயணன் மிகுந்த கலைச் சிறப்பு உடையவனாகச் சுட்டப்படுகின்றான். **"சமணர் நூல்களில் ஆடவர் கலைகள் எழுபத்திரண்டு என்றும் பெண்களுக்குரிய கலைகள் அறுபத்து நான்கு என்றும் கூறப்பட்டுள்ளன"[4]** உதயணகுமார காவியத்தில் பல்வேறு கலைகள் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன பிற கலைகளை விட இசைக்கலையின் சிறப்பு அதிகம் காணப்படுகிறது. இக்கலையின் சிறப்பு யாழ் என்ற கருவி மூலமாக உணர்த்தப்படுகிறது.

இதுபோன்று பிற சமண காப்பியங்களும் இசை முக்கிய பங்கு வகிக்கின்றன. சீவக சிந்தாமணி, பெருங்கதை, சிலப்பதிகாரம் ஆகிய காவியங்களிலும் இசைக்கலையைச் சமணர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறு இருக்கையில் சமணர்கள் இசைக்கலையை அழித்தவர்கள் என்பது அறியாதவர் கூற்று என்று மயிலை. சீனி. வேங்கடசாமி சுட்டுகின்றார். இருப்பினும் ஐஞ்சிறு

காப்பியங்களில் ஒன்றாகிய யசோதர காவியத்தில் யசோதரனின் மனைவி யாழிசை மீட்டுவதில் வல்லவன் ஆகிய மன்னனின் யானைப்பாகன் மீட்டிய யாழிசையில் மனம் மயங்குகின்றாள். குட்ட நோய் உடையவன் யானைப்பாகன் என்றாலும் அவனுடைய இசைக்கு அடிமையாகி அவனுடன் கூடா ஒழுக்கம் புரிகிறாள். இவ்வாறு இசையின் மயக்கும் தன்மை தீங்கை விளைவித்து தவறு நேரிடுவதற்கான காரணமாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு முரணாகக் காணப்படுகிறது.

**கலைக்கு முன்னுரிமை**

வத்தவ நாட்டின் அரசன் சாதானிகன் அரசியான மிருகாவதிக்கு பிறந்தவன் உதயணன். மிருகாவதி கருவூற்றிருந்த சமயம் சிவப்பு நிற பட்டாடை அணிந்து நிலா முற்றத்தில் உறங்கி கொண்டிருந்தாள். அங்கு வந்த அண்டபேரண்ட பறவை அவளை மாமிசப்பிண்டம் என நினைத்து தூக்கிச் சென்றது. உயிரைக் கொன்று தின்னும் இயல்பில்லாத அப்பறவை அவளை கானகத்தில் விட்டுச் சென்றது அங்கே வயிற்று வலி ஏற்பட்டு மிருகாவதிக்கு ஆண்மகவு பிறக்கிறது. துறவறம் சென்ற மிருகாபதியின் தந்தையாகிய சேடக முனிவர் மகளை காண அவளுக்கு சூரிய உதயத்தில் ஆண்மகவு பிறந்தமையால் உதயணன் என்று பெயர் சூட்டுகிறார்.

சேடகமுனிவரின் தவப் பள்ளியில் பல்வேறு கலைகளை உதயணன் பயில்கிறான். நண்பனாகிய யூகியின் தந்தை பிரம்மசுந்தர முனிவரே உதயணனின் ஆசானாகத் திகழ்கின்றார். அனைத்து கலைகளிலும் சிறந்து விளங்கிய உதயணனுக்குப் பரிசாக தேவேந்திரனால் பிரம்ம சுந்தர முனிவருக்கு வழங்கப்பட்ட கோடவதி யாழை அளிக்கிறார்.

**“கரிணமும் புள்ளு மற்றுங்**
**கண்டடி வீழுங் கீதப்**
**புரிந்தரன் கொடுத்த யாழும்**
**பொறைமுனி யருளிற் பெற்றான்” (உ.கு.கா. பா.எண் - 18 )**

தேவேந்திரனால் வழங்கப்பட்ட யாழை பிரம்மசுந்தர முனிவர் தன் மகனாகிய யூகிக்கு வழங்காமல் அனைத்து கலைகளிலும் சிறந்தவனாகிய உதயணனுக்கு வழங்குவதலின் மூலமாக உறவு நிலையை விட கலையே முன்னுரிமை பெற்றுள்ள தன்மையை அறியலாம்.

**“வட இந்தியாவில் யாழ்க்கருவி வழக்கிழந்த பிறகும் தமிழ்நாட்டிலே நெடுங்காலமாகப் போற்றப்பட்டிருந்தது பழந்தமிழ் நூல்களிலே இக்கருவி பெரிதும் பாராட்டிக் கூறப்படுகிறது. பழந்தமிழர்களால் மிகச் சிறந்த இசைக் கருவியாக போற்றப்பட்டது”5** இத்தகைய சிறப்புத் தன்மை பொருந்திய இசைக்கருவியாகிய யாழ் பற்றிய செய்திகளையே உதயணகுமார காவியம் குறிப்பிடுகிறது.

**அஃறிணையையும் வசப்படுத்தும் திறன்**

உதயணன் தெய்வத்தன்மை மிக்க யானையைக் கண்டு கோடவதி யாழை இசைத்துப் பாடினான். கோடவதி யாழின் இசையைக் கேட்ட தெய்வயானை மெதுவாக உதயணன் முன்பு வந்து முழங்கால்களைத் தாழ்த்தி உதயணன் ஏறுவதற்கு வசதியாக தன் கையை கொடுத்தது. யானையின் குறிப்பினை அறிந்த உதயணன் அதில் ஏறி அமர்ந்து தவப்பள்ளியினை அடைந்தான்.

உதயணன் பிரச்சோதன மன்னனின் மகளாகிய வாசவதத்தைக்கு இசை பயிற்றுவிக்கிறான். வாசவதத்தையின் யாழிசை அரங்கேற்றத்தின் போது அவையில் இருந்தவர்கள் மட்டுமின்றி வானுலகிலுள்ள கந்தவர்கள் மற்றும் பறவைகளும் இசையால் மயங்கி வீழ்ந்து கிடந்தன. **"தமிழர் கண்ட சீரிய நரம்புக்கருவியாகிய யாழ் தமிழகத்தில் தொன்மையான காலத்தில் தோன்றியது. இவ்வினிய இசைக் கருவியைக் தமிழர்கள் தெய்வநல்யாழ் என்று ஏற்றுப் போற்றி வந்தனர்"**[6] இவ்வாறு பண்டைய இசைக்கருவியாகிய யாழ் இயல்பாகவே தெய்வத்தன்மைப் பொருந்தியதாக போற்றப்பட்டுள்ளது.

**"விசும்பியல் குமரர் தாழும்**
**வியந்துட னிருப்பப் புல்லும்**
**பசும்பொனி லத்தில் வீழப்" (உ.கு.கா. பா.எண் - 106)**

இதன் மூலம் யாழின் இன்னிசை அஃறிணை உயிரினங்களையும் வசப்படுத்திய தன்மையினை அறிய முடிகின்றது.

**இசை சிறப்பியல்பாக மதிப்பளிக்கப்பட்டமை**

கலைகளிலே இசைக்கலை அனைவருக்கும் மகிழ்வளிக்கக் கூடிய மேன்மையினை உடையதாகும். **"மனிதனுடைய மனதில் உணர்ச்சியை எழுப்பி அழகையும் இன்பத்தையும் அளிக்கிற பண்பு அழகுக் கலைகளுக்கு உண்டு"**[7] இக்காவியத்தில் கலையானது அனைவருக்கும் மன மகிழ்ச்சி அளிப்பதாகவும் அக்கலைத் திறன் உடையவனை தண்டித்ததற்காக மன வருத்தம் கொள்வதாகவும் சுட்டப்படுகிறது இக்காலத்திலும் மனச்சோர்வு, மனமகிழ்வு விழாக்கள் என அனைத்து நிலைகளிலும் இசை முக்கிய பங்கு வகிக்கிறது

இத்தகு சிறப்புமிக்க இசைக்கலையினை உடைய இசைக்கலைஞர்களுக்கும் சிறந்த மதிப்பு அளிக்கப்பட்டுள்ளது. பிரச்சோதன மன்னன் தன்னிடம் சிறை செலுத்தாமல் வந்த ஒரு மன்னரின் பெயரை திறை செலுத்துவோர் பட்டியலில் காணவே அமைச்சர்களை நோக்கி இந்நிகழ்வினை மறைத்தமைக்கான காரணத்தை வினாவுகின்றார் அவர்கள் உதயணன் பேராண்மை, கல்வி, கோடவதி என்னும் தெய்வத்தன்மை பொருந்திய யாழினை இசைக்கும் வித்தையினை உடையவன் என்றும் குறிப்பிடுகின்றனர்.

**"உறுக ளத்தினி லுன்னிய வாண்மையும்**
**பொறுபொ ருள்செறி பீடுடைக் கல்வியும்**
**தறுகண் வேழந் தகைக்குறு பெற்றியும்**
**மறுவில் வீணையின் வாய்த்தநல் விஞ்சையும்"**

**(உ.கு.கா. பா.எண் - 35)**

மன்னனுக்குரிய வீரம் மட்டுமின்றி கலைகளும் ஒரு சிறப்பான பண்பாக மதிக்கப்பட்டது. இசைத்திறன் உடையவன் மீது மக்கள் பெரும் மதிப்பினைக் கொண்டு திகழ்கின்ற தன்மையை இந்நிகழ்வு அடையாளப்படுத்துகிறது.

**உணர்வு பரிமாற்றத்தில் இசை**

உஞ்சை நாட்டு மன்னனுக்கு திறை செலுத்தாத காரணத்தினால் வீரமிக்க உதயணனைச் சூழ்ச்சி செய்து பிடித்து உஞ்ஞை நகர அமைச்சன் சிறையில் இடுகின்றான். தன் நண்பன் சிறைபிடிக்கப்பட்ட நிகழ்வை அறிந்த வத்தவ நாட்டின் அமைச்சனாகிய யூகி தான் இறந்தது போன்ற அமைப்பை வத்தவ நாட்டில் ஏற்படுத்திவிட்டு உஞ்ஞை நாட்டிற்கு மாறுவேடத்தில் வருகை தருகிறான்.

கையில் இசைக்கும் குழலும் உடுக்கையும் தலையில் நீர்க் குடத்தையும் கொண்டு இருக்கும் வண்ணம் வேடம் தரிக்கின்றான். துடி இசையை முழக்கிக் கொண்டு நடந்து வருகின்றான். இத்தகைய இசைத் திறம் மிகுந்த யூகி உதயணனைக் காண சிறைக்கோட்டம் செல்கின்றான். உதயணனின் இருப்பிடத்தை அறிய தானும் உதயணனும் இளம் வயதில் பயின்ற இசையை குழல் கொண்டு இசைக்கின்றான். இசையைக் கேட்ட உதயணன் இதனை இசைப்பவன் யூகியே என்று மனதில் அறிந்து கொண்டு தன் கவலையை நீக்கினான்.

**“கிளைத் தலை யிருவர் கற்ற**
**கிளர்நரப் பிசையுங் கீதம்**
**தளைச்சிறை மன்னன் கேட்பத்**
**தான்மகிழ் குழலி னூத”** **(உ.கு.கா. பா.எண் – 81)**

இவ்வரிகள் மூலமாக இளம் வயதில் கற்ற இசையானது மனதில் ஆழமாகப் பயின்று தனது வருதுயரினை நீக்க இரு நண்பர்களின் உணர்வு பரிமாற்றமாகச் செயல்பட்டமையினை அறிய முடிகிறது.

**இசைத்திறத்திற்கு மதிப்பளித்தல்**

உஞ்சை நகர மன்னனின் சிறைக் கோட்டத்தில் இருந்த உதயணனைக் காப்பாற்ற யூகி உஞ்ஞை நகர பட்டத்து யானைக்கு மதம் பிடிக்க செய்கிறான். யானையை உதயனைத் தவிர பிறர் கட்டுப்படுத்த இயலாது என்பதனை அறிந்த பிரச்சோதன மன்னன் உதயணனின் உதவியை நாடுகின்றான்.

உதயணன் யாழிசையால் களிற்றை அடக்கி அதன் மேல் அமர்ந்து வருகின்றான். அதனைக் கண்ட உஞ்ஞைநகர மன்னன் மனமகிழ்வு அடைந்து பொன் கம்பி கொண்டு செய்யப்பட்ட முத்துமாலையை பரிசாகச் சூட்டி தழுவி கொள்கிறார். **“இந்த தெய்வ வாச்சியத்தினின்று எழும் இன்னொலி விலங்குகளையும் பறவைகளையும் ஊர்வனவற்றையும் ஏனைய உயிரினங்களையும் கவரவல்லதாயிற்று”**[8] இசை மனிதருக்கானது மட்டுமின்றி அனைத்து உயிர்களுக்குமானது அனைத்து உயிரினங்களுக்கும் இன்பத்தினை வழங்கக் கூடியதாகும்.

மன்னன் தன் மகளாகிய வாசவதத்தைக்கு யாழிசை பயிற்றுவிக்க வேண்ட உதயணனும் பயிற்றுவிக்கின்றான். வாசவதத்தையால் யாழிசை அனைவரின் முன்னிலையில் அரங்கேற்றமும் செய்யப்படுகிறது

அவையினர் அனைவரும் இன்னிசை திறனுடைய உதயணனை சிறைபிடித்தமைக்காக வருத்தம் கொண்டிருந்தனர். பிரச்சோதன மன்னனும் மிகவும் வருத்தமுற்று சிறைப் பிடித்தமைக்காக மன்னிப்பு கேட்கிறார்

**"ஏசவன் சிறைசெய் குற்ற**

**மெண்ணுறேல் பெருக்க வென்றான்" (உ.கு.கா. பா.எண் 105)**

இவ்வாறு மன்னனும் மனமுவந்து மன்னிப்பு கேட்கும் வண்ணமாக கலைத்திறனுக்கு மதிப்பு அளிக்கப்பட்டுள்ளது

**இசை கற்பித்தலில் மகிழ்வு**

தனக்கு மிகுந்த சிறப்பினைப் பெற்று தரக்கூடிய இசையை உதயணன் பிறருக்குக் கற்பித்தலிலும் மனமகிழ்வு கொண்டு திகழ்கிறான்.

பிரச்சோதனனின் வேண்டுகோளுக்கு இணங்கி வாசவதத்தைக்கு இசை பயிற்றுவிக்கிறான். யாழிசை அரங்கேற்றத்தின் போது அனைவரும் மகிழ்வுற்றதை கண்ட உதயணன் மிகவும் மன மகிழ்ச்சி அடைகிறான்.

**"வாய்ந்தவா சவதத் தைக்கு**

**வருவித்தும் வீணை தன்னைச்**

**சேர்ந்தவ ணிகிரி லின்பிற்**

**செல்வனு மகிழ்வுற் றானே" (உ.கு.கா. பா.எண் - 103)**

இதன்மூலம் கலைகளில் சிறப்புமிக்கவர்கள் அக்கலை தனக்கு மட்டுமே உரியது என்று சுயநலமாக நினைக்காமல் பிறருக்கும் அக்கலையைக் கற்று கொடுத்து மனமகிழ்வு அடைந்த நிலையானது வெளிப்படுகிறது. மேலும் உதயணன் வத்தவ நாட்டினைச் சார்ந்த பத்மாவதி என்னும் இளவரசிக்கும் யாழிசை பயிற்றுவித்தமையினை இக்காப்பியம் சுட்டுகிறது. அரச குலத்தை சார்ந்த மகளிரும் இசை கற்க மிகுந்த ஈடுபாட்டுடன் திகழ்ந்துள்ளனர் என்பதனை இந்நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

**இசையின் திறம்**

மதம் கொண்ட யானையை அடக்கிய உதயணனைக் கண்ட பிரச்சோதனன் அவனை தழுவி என் அருமை மருமகன் நீயே ஆவாய் என்று இனிய மொழி பேசி மனமகிழ்வு அடைகிறார்.

**"மருமக னீயே யென்று**

**மன்னவ னினிமை கூறி" (உ.கு.கா. பா.எண் – 102)**

சிறைப்பிடித்து வந்த மன்னனே, இசையின் திறத்தினை அறிந்து தன்னுடைய மருமகன் என்று கூறும் அளவிற்கு இசையானது திறமுடையதாகும் மேலும் உதயணனின் இத்தகு இசைத்திறத்தினால் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டு பல்லக்கில் ஏறி பிரச்சோதனனின் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப் பெற்று தலையில் எண்ணெய் தடவி நல்ல நீரில் நீராட்டப்பட்டு பட்டாடையும் நல்ல அணிகலன்களும் அணிவிக்கப்படுகின்றான்.

**அன்பால் கரம் சேர்ந்த யாழ்**

உதயணனின் கோடவதி யாழ் வயந்தகன் களிற்றில் அமர்ந்து எடுத்து வந்த சமயம் மூங்கில் மரத்தில் சிக்கி கீழே விழுந்தது. அதனை தனக்கு பின்னால் வேறோரு களிற்றில் வந்த உதயணனுக்கு வயந்தகன் தெரிவிக்க யானையை நிற்க உதயணன் கட்டளையிடுகின்றான். பின்னர் யாழ் விழுந்த

இடத்தை கடந்து நெடுந்தொலைவு வந்து விட்டதனை அறிந்து அந்த யாழை நமக்கு அளித்த தெய்வம் மீண்டும் தரும் என்று பயணத்தைத் தொடர்கின்றான்.

**“நிலமிகக் கடந்த தென்ன**
**நீர்மை யின் இந்த தெய்வம்**
**நல் மிகத் தருமின் தென்ன” (உ.கு.கா. பா.எண் - 113)**

உதயணன் இசையின் மீது கொண்ட அன்பால் அந்த யாழ் மீண்டும் கிடைக்கப்பெறுகிறது. அருஞ்சனன் எனும் பார்ப்பனன் மூங்கில் கிளையில் சிக்கியிருந்த கோடவதி யாழை உதயணனிடம் சேர்ப்பிக்கிறான்.

இத்தகு இசை சிறப்பினை உடைய உதயணன் தன் மகனாகிய நரவாகனனுக்கு இளம் வயதிலேயே மொழி முதலான பல்வேறு கலைகளை பயிற்றுவிக்கிறான் **“தமிழ்ப் பிள்ளைகள் தம் குழந்தைப் பருவத்திலேயே தாலாட்டுப் பாக்களையும் ஊசல் பாக்களையும் கேட்டனர்….. பழந்தமிழர் தம் பிறப்பு முதல் இறப்பு வரையில் இசையிலேயே வாழ்ந்து வந்தன எனக் கூறுதல் முற்றிலும் பொருந்தும்”[9]** இசை மனிதனது வாழ்விற்கு இன்றியமையா ஒன்றாக இணைந்துள்ளது சிறு வயது முதலே கலைகளுக்கு முதன்மையளித்து கற்பிக்கும் தன்மையானது இருந்துள்ளன.

**தொகுப்புரை**

மனிதனது நல்வாழ்விற்கு உதவுகிற எல்லாத் தொழில்களும் கலைகளாகவே கருதப்பட்டன. ஆயகலைகள் அறுபத்து நான்கு என்று பொதுவாக சுட்டப்படுகையில் சமணர்கள் தங்கள் நூல்களில் கலைகளை பெண்களுக்கானவை ஆண்களுக்கானவை என்று பகுத்து பெண்களுக்கான கலைகள் அறுபத்து நான்கு என்று ஆண்களுக்கான கலைகள் எழுபத்திரண்டு என்று குறிப்பிடுகின்றனர்.

அழகுக்கலைகள் இன்கலை, கவின்கலை, நற்கலை என பல்வேறு சிறப்புப் பெயர்களை உடையன. இவை ஐவகையாக கட்டிடக்கலை, சிற்பக்கலை ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என்று பகுக்கப்படுகின்றன.

உதயணகுமார காவியத்தின் கதைத்தலைவனாகிய உதயணன் கலைகளில் சிறந்து திகழும் பாண்மையால் அவனது ஆசானாகிய பிரம்மசுந்தர முனிவர் தமக்கு தேவேந்திரனால் வழங்கப்பெற்ற யாழினை தன் மகனுக்கு வழங்காது உதயணனுக்கு பரிசளிக்கிறார். இவ்வாறு உறவு நிலைகளைக் கடந்து கலை முன்னுரிமை உடையதாக மதிக்கப்பட்டுள்ளது.

இசை மனிதர்களை மட்டுமின்றி அஃறிணை உயிரினங்களாகிய யானை, புள் இனங்களையும் மேலும் கந்தர்வர்களையும் மகிழ்விக்கும் செய்தி சுட்டப்படுகிறது

இளம் வயதில் கற்ற இசை பிற்காலத்தில் உணர்வு பரிமாற்ற கருவியாக திகழ்கிற தன்மை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

திறை செலுத்தாத காரணத்திற்காகச் சிறைப்பிடிக்கப்பட்ட உதயணனின் யாழிசை மதக்களிற்றையும் அடக்கும் தன்மையை கண்ட பிரச்சோதனன் சிறைபிடித்தமைக்கு வருத்தம் தெரிவித்து சிறையிலிருந்து விடுவித்து பரிசில் வழங்கி தனது மருமகனாகவும் ஏற்கும் அளவிற்கு இசை சிறப்பியல்புடையதாக மதிக்கப்பளிக்கப்பட்டமை இதன் வழியாக புலனாகிறது.

இளவரசிகளாகிய வாசவதத்தை, பத்மாவதிக்கு உதயணன் இசை பயிற்றுவிப்பதன் மூலம் உதயணனின் சுயநலமற்ற கலைத்திறமானது வெளிப்படுகிறது.

கோடவதி யாழ் உதயணனிடம் இருந்து தொலைந்த பின்பும் தெய்வம் சேர்ப்பிக்கும் என்று நம்பிக்கை கொள்கிறான். உதயணனின் அளவற்ற இசை அன்பினால் யாழ் பார்ப்பனன் உதவியினால் உதயணனுக்கு மீண்டும் கிடைக்கப் பெறுகிறது மேலும் கலையின் சிறப்பினை உணர்ந்த உதயணன் தனது ஆண் மகவாகிய நரவாகனனுக்கு இளம்பருவத்திலே பல்வேறு கலைகளைக் கற்பிப்பதாகக் காப்பியம் சுட்டுகிறது. ஏனெனில் கலைகள் என்றும் அழியாமல் பாதுகாப்பதும் அடுத்த தலைமுறைகளுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதும் இக்காப்பியத்தின் வழியாக உணர்த்தப்படுகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. வேங்கடசாமி.மயிலை.சீனி – தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் – ப.எண் 13
2. வேங்கடசாமி.மயிலை.சீனி – தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் - ப.எண் 13
3. இராசமாணிக்கனார்.மா – தமிழகக் கலைகள் - ப.எண் 5
4. இராசமாணிக்கனார்.மா – தமிழகக் கலைகள் - ப.எண் 6
5. வேங்கடசாமி.மயிலை.சீனி – தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் ப.எண் 103
6. இராகவன்.ஆ - இசையும் யாழும் - ப.எண் 125
7. வேங்கடசாமி.மயிலை.சீனி – தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் ப.எண் 14
8. இராகவன்.ஆ - இசையும் யாழும் - ப.எண் 190
9. இராசமாணிக்கனார்.மா – தமிழகக் கலைகள்- ப.எண் 43

**துணைநூற் பட்டியல்**

[1]. இராசமாணிக்கனார்.மா., தமிழக கலைகள்., 2010., செல்லப்பா பதிப்பகம்., மதுரை.

[2]. வேங்கடசாமி மயிலை.சீனி., நுண்கலைகள்., 2006., நாம் தமிழர் பதிப்பகம்., சென்னை.

[3]. வேங்கடசாமி மயிலை.சீனி., தமிழர் வளர்த்த அழகு கலைகள்., 2019., அழகு பதிப்பகம்., சென்னை.

[4]. இராகவன்.ஆ., இசையும் யாழும்., 1971., கலைநூற் பதிப்பகம்., திருநெல்வேலி.